RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s34

OPEN ACCESS

# போர்க்கால கதைகள் உணர்த்தும் சமூக மாற்றங்கள்

அ. வேளாங்கன்னி அமிர்தா [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# The Social Changes That Wartime Stories Convey

A. Velankanni Amrita [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai–600032, Tamil Nadu, India

* Corresponding Author: velankanniamirtha@gmail.com

Received: 22-03-2021
Revised: 02-04-2022
Accepted: 13-04-2022
Published: 27-05-2022

## ABSTRACT

In each era, literary creations or works reflect the lives of people. In that aspect, the early literary grammars reflect that love and heroism are two eyes of Tamilians. Sangam literature dating back more than two thousand years, such as Purananuru and Patiruppattu, are historical repositories of wars fought between several kings. These works include the great warriors who defeated many kings and brought many empires under their reign and the charitable leaders who gave charities to those who sought them as the pivotal focus. The sense of valour prevails when reading these creations. The record of heroic deeds that go to war and win rather than love is set to evoke a sense of heroism. Such a record changes the focus over time to convey the potential casualties, material damage, and grief of the division. That is to say that the feeling of pride that was felt at one point turned into the sadness of crying later on. The focus of this article is to analyse the change and the social benefits of such a change.

**Keywords:** War (Sangam period), Eezham War, Short Story, Records of War

## முன்னுரை

மனிதனின் உணர்வுகளே படைப்புகளாக முகிழ்கிறது. படைப்புகளை வாசிப்பவர்களுக்கும் அதே உணர்வு ஏற்படுவது இயல்பு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சங்க இலக்கியங்களான புறநானூறு, பதிற்றுப்பத்து போன்றவை பல மன்னர்களிடையே நடைபெற்ற போர்களை பதிவு செய்யும் வரலாற்றுக் கருவூலமாகும். இவை பல மன்னர்களை வென்று பல பேரரசுகளை தன் குடைக்குள் கொண்டு வந்த மாபெரும் வீரர்களையும், தன்னை நாடி வந்தவர்களுக்கு வாரி வாரி வழங்கும் கொடையாளர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டுள்ளன. இவற்றை படிக்கும் பொழுது வீரம் என்ற உணர்வு மேலோங்கி இருக்கிறது. இதேபோல் பல ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் நடைபெற்ற உரிமைப்போரை பதிவுச் செய்யக்கூடிய படைப்புகளை வாசிக்கும் போது வீரம் என்ற பெருமித உணர்வை காட்டிலும் வலியும் வேதனையும் மிகுந்த அழுகை என்ற அவலச்சுவை மேலோங்கி நிற்கிறது. ஏன் இந்த மாற்றம்? என்ற கேள்வியே இக்கட்டுரையை விரிக்கிறது. இம்மாற்றத்திற்கான காரணங்களையும் இம்மாற்றத்தினால் சமுதாயத்தில் உண்டான புரிதலையும் பின்வருமாறு விரிவாகக் காண்போம்.

## தொடக்கக் காலமும் போரும்

ஒருவர் அறியாமல் அவரின் பொருளை எடுத்தல் என்பது களவு. அதுவே அவர் அறிந்து அவரை வென்று அவர் பொருளை அடைவது போர் எனப்படுகிறது. இத்தகைய போர் குறித்து நமக்கு கிடைக்கும்

முதல் நூலான தொல்காப்பியத்திலேயே தகவல்கள் கிடைக்கின்றன. பிறர் பொருளை கை கொள்வதற்காகவும், மண்ணாசை கொண்டும், வீரத்தில் யார் சிறந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்காகவும் தொடக்க காலத்தில் போர்கள் நடந்தேறியுள்ளன. தொல்காப்பியம் புறத்திணை வகுத்து போர்களுக்கு பெயரிட்டு அதன் உட்பிரிவுகளாக துறையைக் கூறுவதிலிருந்து அக்கால போர்களுக்கு பயன்படுத்தியுள்ள ஒழுக்க நெறிமுறைகள் நன்கு அறியப்படுகிறது. தொல்காப்பியர் நவின்ற சுரத்துய்த்தல் என்ற துறையை ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில்,

"அருஞ்சுரத்தும் அகன்கானத்தும்

வருந்தாமல் நிரைஉய்த்தன்று."

என்கிறார் (Thirugnanasambantham, 2012). அதாவது பகைவருடைய ஆக்களாக இருந்தபோதும் அவைகளுக்கு எந்த தீங்கும் ஏற்படாமல் அழைத்துச் செல்வதே சுரத்துய்த்தல் என்னும் துறையாகும். இவ்வாறாக ஓர் உயிருக்கு தீங்கு ஏற்படக்கூடாது என நினைக்கும் மனிதநேயம் அனைவரிடத்தும் காணப்பட்டது. வீரத்தை நிரூபிக்க நடைபெறும் போர்களில் மற்றவர் பாதிக்கப்படக்கூடாது என அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் ஒழுக்கம் முறையும் பின்பற்றப்பட்டது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி தவறாக நீதி வழங்கிய பாண்டிய மன்னன் மீது சினத்தைக் காட்டும் போது கூட, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், மூத்தோர், குழவி யெனுமிவரைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய" என்று கூறி மற்றவர்களுக்கு பாதுகாப்பு அளித்த பிறகே மதுரையை எரிக்கிறாள் (Puliyur Kesikan, 1958). தனக்கு தொடர்பில்லாத உயிர்கள் எந்த விதத்திலும் பாதிப்படைய கூடாது என்ற நெறி முறையையும் கடைப்பிடித்தனர். சங்கப் பாடல்கள் ஓர் ஆண் மகனின் வீரத்தை காட்டிலும் பெண்ணின் வீரத்தை மிகவும் விதந்து பேசுகிறது. பெண்கள் சங்கக்காலப் போர்களில் கலந்துக் கொண்டதற்கான குறிப்புகள் இல்லை. ஆனால் போருக்குச் சென்ற ஆண்களுக்கு தாய்ப்பாலிற்கு பதிலாக வீரப்பாலை ஊட்டியுள்ளனர் என்பதற்கான சான்றுகள் நிறையவே கிடைக்கின்றன. "வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா" என்ற பாரதியின் வரிகளும், "கருவினில் வளரும் மழலையின் உயிரில் தைரியம் வளர்ப்பாள் தமிழன்னை" என்ற கண்ணதாசனின் வரிகளும் சங்க இலக்கியம் நவின்றதை நிரூபிக்கும்.

## ஈழத்துப் போர் பற்றிய பதிவுகள்

தனது உரிமைக்காக இலங்கை அல்லது ஈழத்தில் வாழ்ந்த தமிழ் போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் பல ஆண்டு காலமாக நடந்த போரே ஈழத்துப் போர் எனப்படுகிறது. இதனை உரிமைப் போராட்டம் எனவும் கூறலாம். "சுமார் நாற்பதாயிரம் (40,000) இயக்கப் போராளிகளும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (1,50,000) தமிழர்களும், தொண்ணுறாயிரம் (90,000) சிங்களப் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்" என இந்தப் போரின் காரணமாக ஏற்பட்ட உயிர் சேதங்களை ஓர் அறிக்கை பட்டியலிடுகிறது. இத்தகைய உயிர் சேதங்கள் மட்டுமல்லாமல் உயிரோடு இருந்தவர்கள் பட்ட துயரம் சொல்லில் அடங்காதவை. அத்தகைய துயரங்களையும் கண்ணீரையும் தான் அத்தளத்தில் தோன்றிய அத்தனை பதிவுகளும் வெளிப்படுத்துகின்றது. அவற்றில் சில முக்கிய பதிவுகள் குறிப்பிடத்தக்கவை.

ஈழத்தில் நடைபெற்ற துயரமான முள்ளிவாய்க்கால் படுகொலைக்குப் பின்னர் தமிழர்களின் வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்பதை சயந்தனின் "ஆதிரை" புதினம் சித்தரிக்கிறது. அவரது "ஆறாவடு" என்ற புதினமும் இதே மாதிரியான கோணத்தில் தோன்றியவை என்பது குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் நடைபெற்ற அடக்குமுறைகளையும், பாலியல் வன்கொடுமைகளையும் "பார்த்தீனியம்" என்ற புதினத்தில் தமிழ்நதி பதிவு செய்துள்ளார். குணா கவியழகன் என்பார் "நஞ்சுண்ட காடு" "அப்பால் ஒரு நிலம்" "போருழல் காதை" என்ற மூன்று புதினங்களையும் ஈழப்போரினை மையப்படுத்தி அமைத்துள்ளார். இதே வரிசையில் சாத்திரியின் "ஆயுத எழுத்து" விமல் குழந்தைவேலின் "கசகறணம்" வாசு முருகவேலின் "ஜெப்னா பேக்கரி" தீபச்செல்வனின் "நடுகல்" போன்ற புதினங்கள் தோன்றியுள்ளன. ஷர்மிலா செய்யத் "உம்மத்" என்ற புதினம் போர்க்களத்தில் பெண்களின் நிலையை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. அதைப்போல் வெற்றி செல்வியின் "போராளியின் காதலி" என்ற புதினம் ஒரு இயக்கத்திலுள்ள பெண்ணின் கதையை சித்தரிக்கிறது. ஷோபாசக்தி என்பவரின் "BOX கதைப் புத்தகம்" என்ற புதினம் ஈழத்தில் நடைபெற்ற அனைத்துக் கொடுமைகளையும் பதிவு செய்கிறது (Selvakumaran &

Prapha Joselin, 2021). இத்தகைய புதினங்களினூடாகவே எண்ணற்ற சிறுகதைகளும், கவிதைகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

உருத்திரமூர்த்தி சேரன் அவர்களின் "இரண்டாவது சூரிய உதயம்" "யமன்" "எலும்புக்கூடுகளின் ஊர்வலம்" "கானல்வரி" போன்ற கவிதைத் தொகுப்புகளும், வ. ஐ. ச. ஜெயபாலன் அவர்களின் "சூரியனோடு பேசுதல்" "நமக்கென்றொரு புல்வெளி" "ஒரு அகதியின் பாடல்" போன்ற கவிதைத் தொகுப்புகளும், புதுவை இரத்தினதுரை அவர்களின் "இரத்த புஷ்பங்கள்" "பூவரசு வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" என்ற கவிதைத் தொகுப்புகளும் இன்றளவும் ஈழத்தில் நடைபெற்ற போர் துயரங்களையும் தியாகங்களையும் நெஞ்சினுள் பதிய வைத்துக் கொண்டிருக்கின்றன. வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களின் "ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்" எனற குறுங்காவியம் ஈழப்போரின் ஆழத்தை உணர்த்துவதாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடந்த போரை பதிவு செய்கிற படைப்புகள் அனைத்தும் வலியையும் வேதனையையும் மட்டுமே உணர வைக்கின்றன. நம் முன்னோர்கள் உணர்த்திய போர் ஒழுக்கம் முறையைப் பின்பற்றாமையே இத்தகைய அழுகைக்கு காரணம் எனலாம்.

## சங்கமும் ஈழமும்

தொடக்க காலத்தில் பிறர் பொருளை கவர்வதற்காகவும், தன் வீரத்தை நிரூபிப்பதற்காவும் போர் நடைபெற்றாலும் அதில் ஓர் அறம் பின்பற்றப்பட்டது. புறமுதுகிட்டு ஓடுபவர்களை தாக்காமை, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்றவரை துன்புறுத்தாமை போன்ற அறங்கள் பின்பற்றப்பட்டது. இதற்கு காரணம் ஒரு பரந்துபட்ட அன்பு எனவும் கூறலாம். இதைத்தான் வள்ளுவர்,

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை."

என்கிறார் (Subramaniyan, 2016). அதாவது அறச் செயல்களுக்கு மட்டுமே அன்பு துணையாக இருப்பதல்ல, மாறாக ஒருவரின் வீரத்திற்கும் அன்பே துணை நிற்கிறது என்பதை வள்ளுவர் வழி அறியலாம். இதற்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டையும் கூறலாம். அக்கால மன்னர்களின் பண்பு எனக் கூறப்படும் போது சிறுபாணாற்றுப்படையில் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்,

"அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சினம் இன்மையும்

ஆணணி புகுதலும் அழிபடை தாங்கலும்"

என்று நல்லியக்கோடனின் திறத்தை விளக்குகிறார் (Kathir Murugu, 2009). அதாவது பகைவர்களாகவே இருந்தாலும் தன் திருவடியை அடைந்தவர்களுக்கு இரக்கம் காட்டுவது மன்னனின் சிறந்த பண்பாகும் என்பது அறியப்படுகிறது. இதுவே ஈழத்துப் போர் பற்றி இரா. சிவ. சித்து என்பவர் கூறும்போது

"போர் என்பது தயவு தாட்சண்யம் அற்றது என்றோ, அன்பு அறம் ஒழுக்கம் பண்பு விசுவாசம் தியாகம் என்ற அத்தனை மனித மாண்புகளையும் கருணையின்றி காவு கொள்வது என்றோ, போராளிகள் ராணுவம் தவிர்த்து இறந்தும் காணாமல் போன அப்பாவி பொதுமக்களின் எண்ணிக்கை இன்றளவிலும் புதிர்தான் என்றோ அப்போது நாங்கள் அறிந்திருக்கவில்லை" என்கிறார். இந்த வரிகள் அறமற்ற அடக்குமுறைகளையும், முறையற்ற தலைமையையும் சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

தி. ஞானசேகரன் அவர்களின் போர்க்கால கதைகள் என்னும் சிறுகதைத் தொகுப்பே இக்கட்டுரைக்கு துணை நிற்கும் இலக்கியமாகும். டிலான் ஜெயந்தனின் 'ஒற்றைக்கூவல்' என்ற சிறுகதை போரின் குண்டுவெடிப்பைப் பற்றி பதிவு செய்கிறது. பள்ளியில் நடக்கும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தன் ஆசை மகனை வழி அனுப்பி வைக்கின்றனர் பெற்றோர். ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாக அப்பள்ளியில் குண்டு வெடிக்கிறது. காயமடைந்த தன் மகனை மருத்துவமனைக்கு தந்தை அழைத்து செல்கிறார்." கல்லையும் கதறவைக்கும் கதறல்களுடன் அந்த

மருத்துவமனையில், சாவித்திரியின் கதறலிற்குக் கண்திறந்த இயமன் என் மனைவியை ஏமாற்றி விட்டான்" என்ற வரிகள் தாயின் துயரத்தை உணர்த்துகிறது. இதே நிலை புறநானூற்றில்,

"மீன் உண் கொக்கின் தூவி அன்ன

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

களிறு எறிந்து பட்டனன் எனும் உவகை

ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்

நோன்கழை துயல்வரும் வெதிரத்து

வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே."

என்று நவிலப்படுகிறது (Swaminatha Iyer, 1984). வயது முதிர்ந்த தாய் ஒருத்தி தன் மகனை போர் முகம் நோக்கி விடுக்கிறாள். வயது முதிர்ந்த தாய் என்று கூறுவது அவளுக்கு இருப்பது இந்த ஒரே மகன் இன்னொரு மகனைப் பெற்றெடுக்க முடியாத நிலையை உணர்த்துகிறது. அந்தப் போர்க்களத்தில் அந்த வீரன் ஒரு யானையை வென்று நாட்டிற்கு பெருமை சேர்த்து அதே சமயத்தில் போர்க்களத்தில் அவனும் தன் இன்னுயிரை தியாகம் செய்கிறான். இந்த செய்தியை கேட்ட தாய் தன் மகனுக்காக சில வினாடிகள் கண்ணீர் விடுகிறாள். ஆனால் இந்தத் தாயின் கண்களில் இருந்து வரும் கண்ணீரில் ஒரு பெருமிதமும், நாட்டிற்கு தன் மகன் ஆற்றிய தியாகத்தின் வெளிப்பாடும் ஒருங்கே உணரமுடிகிறது. ஆனால் முன்னர் சொன்ன தாயின் கதறல் ஒரு ஆழமான துயரத்தையும் ஏமாற்றத்தையும் மட்டுமே தருகிறது.

இரு நிகழ்வுகளிலும் தன் மகனை இழந்த இரு தாய்களின் உணர்வு நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. சூழ்நிலை ஒன்றாக இருந்தாலும் ஒரு இழப்பு பெருமிதத்தையும், ஒரு இழப்பு அழுகையையும் தருவதற்கு காரணம் ஈழத்தில் நடைபெற்ற முறையற்ற தாக்குதல்கள் ஆகும். தன் நாட்டிற்காக தன் மகன் உயிர்த்தியாகம் செய்தது தாயுள்ளத்திற்கு வீரம் என்ற பெருமிதத்தை கொடுக்கிறது. சில மனிதர்களின் அதிகாரத்திற்காக பால்மணம் மாறாத தன் மகனின் இன்னுயிர் பறிக்கப்பட்டது அதே தாயுள்ளத்திற்கு அழுகை என்ற அவலத்தை கொடுக்கிறது.

## நடுகற்களும் எலும்புகளும்

ஒருவர் செய்த உதவியை என்றும் மறக்காமல் இருப்பது நமது பண்பாகும். அதனடிப்படையில் போர்க்களத்தில் தன் நாட்டிற்காக இன்னுயிரையும் துச்சமாக எண்ணி தியாகம் செய்தவர்களுக்கெல்லாம் நடுகல் வைத்து அவர்களை தெய்வமாக வழிபடுகின்ற ஒரு மரபும் நம்மிடையே இருந்து வந்துள்ளது. இத்தகைய நடுகற்கள் இன்றளவிலும் பல இடங்களில் நாம் காணலாம். இலக்கியங்களிலும் இதற்கான குறிப்புகள் உள்ளன. அவ்வாறு நடுகல் வைப்பது அந்த வீரனின் தியாகச் செயல்களை அழியாமல் நினைவூட்டிக் கொண்டிருக்கும். மேற்கூறியவற்றை பதிவு செய்யும் விதமாக புறநானூற்றில்,

"பெருங்களிற்று அடியின் தோன்றும் ஒருகண்

இரும்பறை இரவல! சேறி ஆயின்,

தொழாதனை கழிதல் ஓம்புமதி; வழாது,

வண்டுமேம் படூஉம், இவ் வறநிலை யாறே;

பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து,

கல்லா இளையர் நீங்க நீங்கான்,

வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்

கொல் புனல் சிறையின் விளங்கியும் கல்லே."

என்ற பாடல் அமைந்துள்ளது (Swaminatha Iyer, 1984). ஆநிரைகளை மீட்டு கொண்டு வரும் கரந்தை போரில் ஈடுபட்ட வீரன் ஆநிரைகளை காக்கும் பொருட்டு பல வீரர்களுடனும் போரிட்டு இறுதியில் உயிர் தியாகம் செய்கின்றான். அதனின் நினைவாகவே அவனுக்கு நடுகல் நடப்பட்டுள்ளது. அந்த வழியில் செல்லும் பாணனே! அத்தகைய வீரம் பொருந்தியவனின் நடுகல்லை வழிபட்டுச் செல்வாயாக என்று இப்பாடல் அமைந்துள்ளது. இத்தகைய நடுகற்கள் வீரர்களை நினைவுபடுத்துவது மட்டுமல்லாமல் நமது வீரத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. ஈழத்தில் தனது உரிமைக்காக போராடிய போராளிகளின் அல்லது அகதிகளாக மாற்றப்பட்டவர்களின் வீரத்தை அடையாளம் செய்ய அடையாளச் சின்னங்கள் உள்ளனவா? என்ற கேள்விக்கு தாமரைச்செல்வி அவர்கள் எழுதிய "அடையாளம்" என்ற சிறுகதை பதில் நவிலும். அந்தக் கதை எங்கோ கிடக்கும் மனிதனின் எலும்பு துண்டுகளை காவல் நிலையம் பத்திரப்படுத்தி உரியவர்களிடம் கொடுப்பதாக அமைந்துள்ளது. தனது சொந்த மண்ணிலேயே தன்னை அகதிகளாக மாற்றி சோற்றுக்கு வழியில்லாமல் தடுமாறும் நேரத்தில் தனது மனையில் உள்ள தேங்காய்களை பறித்து வரச் சென்றவர்களை சுட்டுக்கொன்ற கொடுமைகள் ஈழத்தில் நடந்தேறியுள்ளது. அவ்வாறு சுட்டுக் கொன்றவர்கள் சடலம் கூட உரியவர்களிடம் ஒப்படைக்கப் படுவதில்லை. பல நாட்கள் சென்ற பின்பு அந்த சடலத்தில் உள்ள சதையும் ரத்தமும் காய்ந்து வெறும் எலும்புக் கூடுகளாக காவல்துறையினரால் மீட்கப்பட்டு உரியவர்களிடம் கொடுக்கப்படுகிறது. இதில் அடையாளம் காணாத எத்தனையோ எலும்புக்கூடு அந்த காவலரது பக்கத்து அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறது.

" எலும்புக்கூடு அடையாளம் காண வைச்சிருக்கு என்று பேப்பரில் வந்ததாம். மத்தியானம்தான் பக்கத்துவீட்டு பிள்ளை சொல்லுது. உடனுக்கும் நானும் ஓடி வாறன்"

"அங்க இருக்கு. போய்ப் பாருங்கோம்மா" சிறிது விநாடி கழித்து

""அய்யோ என்ர அவர்தான். இது என்ர அவர்தான் என்ர கடவுளே" அந்தப் பெண்ணின் ஓவென்று அலறல் சுவரெங்கும் மோதி மோதி அறைந்து ஒலித்தது" (Thirugnanasambantham, 2012).

என்ற பகுதி மனதை கனக்கச் செய்கிறது. ஈழத்தில் இந்தப் பெண்ணைப் போல் இன்னும் ஏராளமான பெண்கள் தன் கணவன் வந்து விடுவான் என்ற ஏக்கத்தில் இருந்து என்றோ ஒரு நாள் அவர்களை எலும்புக்கூடுகள் ஆக அடையாளம் காணப் போகிறார்கள். தன் நாட்டிற்காக உயிர் கொடுத்த இறந்தவரின் நினைவானது நடுக்கல் என்றான் வீர அடையாளமாக காட்சியளிக்கிறது. ஆனால் சொந்த நாட்டிலே பசிக்காக தனது மனைக்கு சென்றவர்களின் நினைவு எலும்புகளாக இன்னும் கண்டெடுக்கப்படாமலே உள்ளது. தனது நாட்டிற்காக உயிர் துறந்தவர்கள் மட்டும் வீரர்கள் அல்ல. தன் குடும்பத்தின் பசியை போக்குவதற்காக உயிர்த் துறந்த ஒவ்வொருவரும் வீரர்களே.

பசி என்னும் போது ஓ.கே.குணநாதன் அவர்கள் எழுதிய "ஒரு பிடி சோறு" என்ற சிறுகதை தான் கண்முன்னேத் தோன்றும். ஈழத்தில் நடைப்பெற்ற போர்களில் இறந்தவர்களைக் காட்டிலும் போருக்குப் பின் அகதிகளாக மாற்றப்பட்டு பசியின் கொடுமையினால் இறந்தவர்கள் தான் அதிகம். ஒவ்வொருவரும் அகதிக் கூடங்களில் ஒருவேளை உணவிற்காக படும் துயரத்தை மையப்படுத்தியே "ஒரு பிடி சோறு"கதைக்களம் அமைந்துள்ளது.

சண்முகம் உணவிற்காக காலையிலேயே வீட்டை விட்டு சென்றுவிட்டான். அவனுடைய இரு பிள்ளைகளும் மருத மரத்தின் அடியில் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை 'அம்மா பசிக்கிறது' என்று கூறத் தொடங்கினார். கனகமும் சண்முகம் ஏதாவது கொண்டு வருவார் என்ற நம்பிக்கையோடு அப்பா உணவு கொண்டு வருவார் என சொல்லிக்கொண்டிருந்தாள். "வாழும் வளரும் பிள்ளைகளுக்கு ஒருபிடி சோறு ஒழுங்காகக் கொடுக்க முடியவில்லையே! தமிழனின் தலைவிதியை நினைத்து மனம் அழுதது" என்ற கதையாசிரியரின் வரிகள் அங்குள்ள நிலைமையை உணர்த்தும் (Gnanasekaran, 2007). இவர்கள் வறுமையானவர்கள் அல்ல போரினாலும், இடம்பெயர்வு காரணமாகவும் வறுமையாக்கப்பட்டார்கள். சண்முகமும் ஏமாற்றத்துடன் வீட்டிற்கு வந்தான். அன்று வரக்கூடிய உணவு லாரியும் வரவில்லை. "பிச்சை போடுறது போல போடுற நாலு அரிசிக்கு நாயாக அலையிறத விட நாலு பேரும் நஞ்சைக் குடிச்சிற்றுச் செத்து போயிடலாம் எத்தின நாளைக்குத்தான் இப்படி பேயா அலையிறது" என்ற வரிகள் சண்முகத்தின் வறுமை

நிலையையும், வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள வெறுப்பையும் உணர்த்தும். புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர்,

"அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருது களத்து ஒழியப்

பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்

பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்"

என்ற பாடலை 'பெருஞ்சோற்று உதயஞ்சேரலாதனை' பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடுகிறார் (Swaminatha Iyer, 1984). அதாவது பாரதப்போரில் இரு படைகளுக்கும் பெருமளவு உணவு கொடுத்து வரலாற்றில் நீங்கா இடம் பிடித்தவர் உதயஞ்சேரலாதன் ஆவார். இச்செய்தியின் வாயிலாக பசித்த உயிர்களுக்கு உணவளிப்பது தலைசிறந்த அறமாக முன்னோர் கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது. இப்பாடல் மட்டும் அல்லாமல் "பெருஞ்சோற்று நிலை" என்ற ஒரு துறையே புறம் பற்றிய இலக்கண நூல்களில் காணப்படுகிறது. போரில் ஈடுபடும் வீரர்களுக்கு வேண்டிய உணவை வழங்குதல் ஒரு மரபாகும். இத்தகைய மரபுகள் ஈழத்தில் பின்பற்றப்பட்டதாக தெரியவில்லை. முன்னோர் வீரத்தில் யார் சிறந்தவர்கள் என்பதை அறிந்துகொள்ள போரிட்டனரே அன்றி மற்ற உயிர்களை பறிப்பதற்காக அல்ல. எனவேதான் அது பெருமிதம் என்ற வீர உணர்வு வெளிப்படுகிறது. ஈழத்தில் உரிமையை மறுத்து உயிர்கள் பறிக்கப்பட்டன காரணமாகத்தான் அழுகை என்ற அவலம் பதிவு செய்யபடுகிறது.

## போர்களத்தில் பெண்கள்

சங்ககால போர்களில் பெண்கள் ஈடுபட்டதற்கான குறிப்புக்கள் இல்லை ஆனால் முன்னர் கூறியது போலவே ஆண்களுக்கு வீரத்தை ஊட்டிவர்கள் தாய்மார்கள் தான் என்பதற்கான பல குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. சங்க காலத்திற்குப் பிறகு புராண இதிகாச போர்களிலும், விடுதலைப் போர்களிலும் பெண்கள் கலந்து கொண்டதற்கான பல சான்றுகள் கிடைக்கின்றன. ஈழத்து போர்களிலும் பெண்கள் பலர் ஈடுபட்டுள்ளனர். போர்நெறியைக் கடந்து அவர்களுக்கு ஏராளமான வன்கொடுமைகள் நடந்தேறியுள்ளன. பெண்ணின் வீரத்தை புறநானூற்றில்,

"'மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்

முலை அறுத்திடுவேன், யான்' எனச் சினைஇக்,

கொண்ட வாளொடு பிடுபிணம் பெயராச்,

செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய

படுமகன் கிடக்கை காணூஉ,

ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே"

என்ற பாடலும்,

இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி,

வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்

பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,

ஒருமகன் அல்லது இல்லோள்,

'செரு முகம்நோக்கி செல்க' என விடுமே"

என்ற பாடலும் பெண்களின் வீரத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளன (Swaminatha Iyer, 1984). முன்னர் கூறிய தாய் போர்க்களத்தில் தன் மகன் நாட்டிற்காக விழுப்புண் வாங்காது புறமுதுகிட்டு ஓடினான் என்று அறிந்தால் அவன் பாலுண்ட முலையை அறுத்திடுவேன் என சினம் கொண்டு கையில் வாள் ஏந்தி போர்க்களம் நோக்கிச் செல்கிறாள். அங்கே தன் மகன் வீர மரணம் அடைந்ததை நோக்கி அவனைப் பெற்றப் பொழுதைக் காட்டிலும் பெரும் மகிழ்ச்சி கொள்கிறாள். இரண்டாம் பாடலில் வரும் தாயோ தன் தமையனனையும், கணவனையும் முந்தையப் போரில் இழந்த பின்னும் பால் மனம் மாறாத தன் மகனை மறுநாள் போருக்கு அனுப்புவது வீர உணர்வின் வெளிப்பாடாகவே இருக்கிறது. இத்தகைய வீரம் நிறைந்த பெண்ணினம் ஈழத்துப் போரில் படும்பாட்டை தி.ஞானசேகரன் அவர்கள் 'காட்டுப் பூனைகளும் பச்சைக் கிளிகளும்' என்ற சிறுகதையில் பதிவு செய்துள்ளார். போருக்குப் பின்னர் அகதிகளாக வாழும் பெண்கள் மற்றும் பலருக்கு ஏற்படும் பிரச்சனைகளை இந்த கதை சித்தரிக்கிறது. இந்தக் கதையில் டியூஷன் படிக்கச் செல்லும் பெண்களை அங்கே இருக்கும் சில ஆண்கள் கேலி மற்றும் பாலியல் வன்கொடுமை செய்தது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த கதையின் இறுதியில் ஆசிரியர் சொல்லும் “கிளி ரத்த வெள்ளத்தில் குற்றுயிராய் கிடக்கிறது அதன் அடிவயிற்றின் கீழ் காட்டுப் பூனை பதித்த கோரச்சுவடுகள்” என்ற வரிகளிலுள்ள உவமையை எளிதாக கடந்து செல்ல முடிவதில்லை (Gnanasekaran, 2007). சங்க காலத்திற்கும் ஈழத்துப் போருக்கும் கால வேறுபாடு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். இந்த ஆண்டுகளுக்கு இடையில் பெண்களின் வீர உணர்வு மறைந்து அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை கண்டு அனுதாபப்படக்கூடிய நிலை உருவாகியுள்ளதை மேற்சொன்ன பதிவுகள் வலியுறுத்தும்.

## இலக்கியங்களும் அமைதியும்

ஒரு செயலின் நேர்மறை மற்றும் எதிர்மறையான கருத்துக்களை நவிலும் பொழுதுதான் அந்த செயல் பற்றிய அனைத்தும் அறிந்து கொள்ள முடியும். அந்தப் பணியைத்தான் இலக்கியங்களும் செம்மையாக செய்து வருகின்றது. போரினால் ஏற்படும் உயிர் சேதங்களையும், பொருட் சேதங்களையும், பிரிவின் துயரங்களையும், மனக் கவலைகளையும் இலக்கியங்கள் பதிவு செய்ததன் காரணமாக தான் போரில்லா அமைதியான சமூகம் உருவாக வேண்டும் என்ற எண்ணமானது பிறக்கிறது. இரண்டு உலகப் போர்கள் நடந்து முடிந்த பின்புதான் மற்றொரு போர் நடக்கக் கூடாது என்பதற்காக 1939 இல் பல நாடுகள் ஒருங்கிணைந்த அமைப்பாக தோற்றம் பெற்று 1942 இல் ஐக்கிய நாடுகளின் சபையாக அங்கீகரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் சபை கூடி 1943 இல் உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஒரு நிறுவனத்தை கட்டமைக்கிறது. அதற்கான கொள்கைகளும் பிறப்பிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் கொள்கையில் மற்ற நாடு தலையிடக் கூடாது. நாட்டு மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றுவது அந்நாட்டின் கடமை போன்றவையாகும். இந்தக் கொள்கைகளில் திரு ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்படுத்திய பஞ்சசீலக் கொள்கையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய மாற்றத்திற்கு காரணமாக விளங்குவது இலக்கியங்களேயாகும். இதுபோன்ற மாற்றத்தை உருவாக்கும் இலக்கியங்களுக்கு தமிழக அரசு விருது, சாகித்ய அகாதமி விருது, ஞானபீட விருது போன்ற உயரிய விருதுகள் கொடுத்து சிறப்பிப்பது மிகச்சிறந்த பண்பாகும்.

## முடிவுரை

போர் பற்றிய பதிவுகள் சங்க காலத்திற்குப் தற்காலத்திற்கும் பல நிலைகளில் வேறுபட்டுள்ளதை அறிய முடிகிறது. போர் அறங்களும், ஒழுங்கு முறைகளும் காலப்போக்கில் மறந்தும், மறைந்தும் போவது இத்தகைய வேறுபாடுகளுக்கு காரணமாக அமைகிறது. போரின் நோக்கம் பொதுநலத்திலிருந்து சுயநலமாக மாறுவதும் வேறுபாட்டிற்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. இவ்வாறாக போர் குறித்த பதிவுகளின் சமுதாய மாற்றமும் அம்மாற்றத்திற்கான சூழலும் இக்கட்டுரை வழி நன்கு அறியமுடிகிறது.

## References

Gnanasekaran, T., (2007) porkkala Kataikal, 1st edition, Mithra Arts and Creations, Chennai, India.

Kathir Murugu, (2009) Pathupattu, 1st edition, Saradha Pathippagam. Chennai, India

Puliyur Kesikan, (1958) Silappathigaram, 1st edition, Pary station, Chennai, India.

Selvakumaran, S., Prapha Joselin, C., (2021) Critically analysis of Shobasakthi Box Story Book, International Research Journal of Tamil, 3(4), 44-49. https://doi.org/10.34256/irjt2146

Subramaniyan, M., (2016) Thirukural, Commercial Publications, Chennai, India

Swaminatha Iyer, U.V., (1984) Purananooru Moolamum Uraiyum, U Ve Sa Noolaga nilayam, Chennai, Tamil Nadu, India.

Thirugnanasambantham, S., (2012) Purappporul Venba Maalai, Kathi Publications, Thiruvaiyaru, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License